திரு. டி. மணி : தலைவர் அவர்களே, வேளாண்மைக் கல்லூரி சம்பந்தமாக ஒரு நீண்டகாலக் கோரிக்கை இருக்கிறது. குமரி மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வதாக ஒரு கூட்டத்திலே பேசினார்கள். இந்த ஆண்டு அல்ல, அடுத்த ஆண்டிலாவது குமரி மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரியை ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : நெல்லை மாவட்டம் குமரி மாவட்டத்திற்குப் பக்கத்திலேதான் இருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, வருகிற கல்வி ஆண்டிலே விவசாயக் கல்லூரியைப் போல் 2 ஆவது 3 ஆவது ஆரம்பிக்கப்படும் விவசாயக் கல்லூரியை குறிப்பாக வட ஆற்காடு மாவட்டத்திலே எப்போது ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது சொல்ல முடியாது.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவசாயக் கல்லூரியிலே படித்து பட்டம் பெற்றவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிடைத்திருக்கிறதா? அப்படிக் கிடைக்கவில்லை என்றால் கிடைப்பதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : வேலைக்கு ஆள் இல்லை என்ற பற்றாக்குறைதான்.

தமிழ்நாட்டில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி நிறுவும் திட்டம்.

396. *(வினா 22308) திரு. செ. செம்மலை : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழ்நாட்டில் புதியதாகக் கால்நடை மருத்துவக் கல்லூரி நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஆம்.

திரு செ. செம்மலை : தலைவர் அவர்களே, ஆரம்பிக்கப்பட இருக்கிற கால்நடைக் கல்லூரி எங்கு ஆரம்பிக்கப்படுவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது? சேலத்திலே அந்தக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவக் கல்லூரியினுடைய தலைவர் கல்லூரி துறையினுடைய இயக்குநர் ஆகியவர்களுடைய கருத்துரைகளின் அடிப்படையில் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளருடைய கருத்துரை அடிப்படையில் அரசு விரைவில் முடிவு செய்யும்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே குமரி மாவட்டத்திற்கு விவசாயக் கல்லூரி கேட்கப்பட்டது, கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் இல்லை என்று நேற்றே அறிவித்தார்கள் ஆகவே கால்நடைக் கல்லூரி அங்கே ஆரம்பிப்பதற்கு முன்வருமா? அங்கே அரசு சார்பிலே ஒரு கல்லூரி கூட இல்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே அதை மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அந்தக் குழுவின் பரிந்துரை வந்ததற்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்யவேண்டும்.

[முற்பகல் 9-20]

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே கால்நடைப் பண்ணை தர்மபுரி, ஓசூரிலே நிறுவப்பட்டது. கால்நடை வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் வேண்டிய இயற்கை அமைப்பும் நல்ல சீதோஷ்ண நிலையும் இருக்கிற காரணத்தினாலும் ஏற்கனவே அரசு ஆர்ஜிதம் செய்த நிலங்கள் இருப்பதாலும் அங்கே கால்நடை மருத்துவக் கல்லூரியைக் கொண்டுவர அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அதையும் சேர்த்துப் பரிசீலிப்போம்.

சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்க கோடை நீர்த் தேக்கம் கட்டும் திட்டம்.

397. (*வினா 16546) திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில், புளியங்குடி நகராட்சிப் பகுதிகளுக்குக் கோடையில் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாமலிருக்கக் கோடை நீர்த் தேக்கம் கட்ட அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS